## தலைப்பு 273 - புத்தளம் மாவட்ட செயலகம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

புத்தளம் மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் புத்தளம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 04 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

புத்தளம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு,அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(ஈ) உப பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேந்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### சட்டம், விதிகள் மற்றும் பிரமாணம் ஆகியவைகளுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரீட்சிப்புக்களில் அவதானிக்கப்பட்ட சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே ஒப்பீடு செய்யப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | | |
|---|---|---|---|---|
| **சட்டம், விதிகள், மற்றும் பிரமாணம் ஆகியவற்றிற்கான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
| | ரூபா | | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 109 ஆம் பந்தி | 3,064,063 | 1989 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் இழப்பு நட்டம் ஏற்பட்டு 01 முதல் 30 வருட காலம் கடந்துள்ள போதிலும் மாவட்ட செயலகங்களுக்குரிய 19 வாகனங்களுக்கு பதிவழிக்கப்படாத அழிவு நட்டங்களின் பெறுமதி குறித்த பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பல வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற அழிவு நட்டங்கள் தொடர்பில் உரிய தரவுகளை பெற்றுக் கொள்வதில் காணப்பட்ட அசௌகரியத்தின் அடிப்படையில் நிறைவு செய்ய முடியாதுள்ளது. அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | அரச ஆதனங்களுக்கு ஏற்பட்டுள்ள நட்டங்கள் தொடர்பில் நிதிப் பிரமாணம் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| புத்தளம் மற்றும் முந்தல பிரதேச செயலகங்களுக்கு 2021 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த ரூபா 69,629,383 பெறுமதியான 46 செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றம் 20-25 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டதுடன் நிதியேற்பாடு இல்லாதிருந்த காரணத்தினால் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். | உரிய நிதியேற்பாட்டினை பெற்று திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) வென்னப்புவ ஜோசவ்வாஸ் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் கூரையொன்றினை அமைப்பதற்கு 2014 ஆம் ஆண்டு ரூபா 48,638,504 செலவிடப்பட்டிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டளவிலும் விளையாட்டரங்கின் நலனை பெறாத முழுமையான செயற்திட்டமொன்றாக நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது. | வரிசை அமைச்சின் கீழ் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்ட இச்செயற்திட்டம் தொடர்பில் சாத்தியவளக் கற்கை கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் புத்தளம் மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது பெற்றுக்கொள்ளப்பட்டு மதிப்பீடுகளுக்கு இணங்க நிர்மாணப் பணிகளை கண்காணிப்பதற்கு மாத்திரம் ஆகும். | நிர்மாணங்களை பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) வென்னப்புவ பிரதேச செயலகத்தினால் ரூபா 1,467,477 செலவிடப்பட்டு 2021 ஆம் ஆண்டில் தாழ் நிலமொன்றை மீட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த வாய்க்கால் எக்கமுத்து கரப்பந்தாட்ட விளையாட்டு அரங்கு ஆங்காங்கே வெடிப்பிற்குள்ளாகி இருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2022 பெப்ரவரி 07 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | நிர்மாணப் பணிகளின் மேற்பார்வை வென்னப்புவ பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் செயற்திட்டத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தில் உள்ள குறைபாடுகளை துரிதமாக நிறைவு செய்து செயற்திட்டத்தை பயன்பாட்டிற்கு உள்ளாக்க கூடிய நிலைக்கு மாற்றுவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2.3 கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முந்தலம பிரசேத செயலகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டுத் தொகை ரூபா 990,000 ஆன இரு வீதிகளை மேம்படுத்துவதற்காக சமூக அடிப்படை அமைப்புக்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் ABC இற்காக வழங்கப்பட வேண்டிய Compaction Test அறிக்கை வழங்கப்படாமை, போதிய காலம் இல்லாதிருந்தமையின் அடிப்படையில் நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். | கிடைக்கும் நிதியேற்பாடு களுக்கு உரிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாவட்ட செயலகத்தினால் பிரதான பெறுகைகள் திட்டமொன்று மற்றும் பெறுகைகள் காலஅட்டவணையொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | மாவட்ட செயலகத்தின் செலவினத் தலைப்பிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும் ஒவ்வொரு நிகழ்ச்சித் | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 4.2.1 மற்றும் 4.2.2 இன் பிரகாரம் பிரதான பெறுகைகள் |

| | | |
|---|---|---|
| | திட்டங்களுக்குமான கால அட்டவணை தயாரிக்கப்பட்டிராததுடன் எதிர்காலத்தில் ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் கால அட்டவணை தயாரிப்பதற்கு உரிய பிரிவுகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | திட்டமொன்று மற்றும் பெறுகைகள் கால அட்டவணை தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) புத்தளம் மாவட்ட செயலகத்தினால் சேதனப் பசளை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக 08 சந்தர்ப்பங்களில் ரூபா 54,689,300 கூட்டுத்தொகையான 08 பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் உபகரணங்களை கொள்வனவு செய்திருக்கவில்லை. அதன் காரணமாக பெறுகைப் பணிகளுக்கு செலவிடப்பட்ட ஊழியம் மற்றும் வழங்கல் விளைவற்ற செலவினமாக மாறியிருந்தது. | சேதனப் பசளை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு உபகரணங்களை வழங்குதல் மிகவும் அத்தியாவசியமான விடயம் என்பதால் அதற்காக பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் குறித்த அனைத்து உபகரணங்களையும் இறக்குமதி செய்ய வேண்டியதாக வழங்குனர்களால் தெரிவிக்கப்பட்டது. அது 2022 மார்ச் அல்லது ஏப்ரல் மாதமாக இருக்கக்கூடும் என மேலும் குறிப்பிடப்பட்டது. நாட்டில் நிலவிய நிலைமை காரணமாக குறித்த கொள்வனவுகள் மேற்கொள்ளப்படவில்லை. | பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது குறித்த பணிகளை சரியாக திட்டமிட்டு கொள்வனவு செய்ய இயலும் என மாத்திரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) புத்தளம் மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான 05 உத்தியோகபூர்வ இல்லங்களின் தேவைப்பாடுகளையுடைய உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள 06 இல்லங்களை பழுதுபார்த்து | தற்போது மாவட்ட செயலகத்திற்கு சொந்தமாக பயன்பாட்டிற்கு பொருத்தமான 05 உத்தியோகபூர்வ இல்லங்கள் காத்திருப்பு பட்டியலில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும் அந்த வீடுகளில் உள்ள பழைமையான நிலைமை | உத்தியோகபூர்வ இல்லங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு பயன்படுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 09 உத்தியோகபூர்வ இல்லங்கள் வேறு நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தன. | மற்றும் குறைபாடுகள் காரணமாக அவர்களால் அந்த இல்லங்களை பொறுப்பேற்பதில் விருப்பமின்மை காணப்பட்டது. உங்களால் குறிப்பிடப்பட்ட விளைவற்றுக் காணப்படும் 06 உத்தியோகபூர்வ இல்லங்கள் மிகவும் பழைமையான சிதைவடைந்த நிலைக்கு உள்ளாகியிருக்கும் காரணத்தினால் அதனை பழுதுபார்க்க பெருந்தொகையான பணம் தேவைப்படும் அதனால் எமக்கு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டின் மூலம் அதனை பழுதுபார்ப்பதும் முடியாததாகும். | |
| (ஆ) | புத்தகளம் நகர சபையினால் மாவட்ட செயலகங்களுக்குரிய உத்தியோகபூர்வ இல்லமொன்று காணப்பட்ட ஒரு ஏக்கருக்கு அதிகமான காணி அல்பா கட்டிடத்தின் வாகனம் தரிக்கும் பணிகளுக்கு வாகனத் தரிப்பிடமொன்றாக அபிவிருத்தி செய்வதற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டவாறு அக்காணியின் பெறுமதிக்கு சமமான காணியொன்றினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அக்காணியினை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் புத்தகளம் நகர சபைக்கு நகரின் அபிவிருத்திக்காக வழங்கப்படும் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான காணி மற்றும் நகர சபையினால் எமக்கு வழங்குவதற்கு உரிய காணியையும் மதிப்பீடு செய்வதற்கு விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறே குறித்த காணியில் நிர்மாணிப்பதற்குரிய உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு உரிய மதிப்பீடுகள் எம்மால் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | தாமதமின்றி உரிய காணிகளை பெற்று திட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | மாவட்ட செயலகத்திற்குரிய பௌசர் பல வருடங்களாக பயன்படுத்தப்படாது நிறுத்தப்பட்டிருந்தமையால் இற்றுப்போனவாறு அகற்றப்பட வேண்டிய நிலைக்கு உள்ளாகி காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சொத்துக்களை பாதுகாப்பாக தரித்து வைக்க வேண்டியதுடன் பயன்படுத்த முடியாத சொத்துக்களை முறையாக கைதவிர்க்க வேண்டும். |

## 2.6 அரச உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 மற்றும் 885 இன் பிரகாரம் மற்றும் உள்ளகமற்றும் உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 07/2019 ஆம் இலக்க மற்றும் 2019 மார்ச் 23 ஆந் திகதிய மாவட்ட நிர்வாகச் சுற்றறிக்கையின் 03 மற்றும் 05 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் 03 மாதங்களினுள் பிணை வைத்து நிறைவு செய்ய வேண்டிய போதிலும் மாதம்பே பிரதேச செயலகம் உள்ளடங்கலாக 07 உத்தியோகத்தர்கள் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் பிணை வைப்பதற்கு குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதுடன் இந்த ஆண்டினுள் பிணை வைக்க வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்களினதும் பிணைகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | சட்டங்கள், விதிகள் மற்றும் சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.7 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிர்மாணிக்கப்பட்டவாறு உள்ள மாவட்ட செயலக தலைமைக் கட்டிடத்தின் 14 ஆவது பட்டியலுக்குரிய கொடுப்பனவு நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் தீர்ப்பனவு நடைமுறைக்கு சென்று 14 ஆம் பட்டியலுக்கு கொடுப்பனவு செய்ய நேர்ந்தமையினால் தாமத வட்டியாக ரூபா 10,349,580 செலுத்த நேர்ந்திருந்தது.<br><br>(ஆ) 2018 செப்தெம்பர் 25 ஆந் திகதி தீர்ப்பனவு அறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்கு ஒப்பந்த உடன்படிக்கையின் 15.4(9) இன் பிரகாரம் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்ட திகதி முதல் | கட்டிடத்தில் காணப்பட்ட வெடிப்புக்கள் மற்றும் சிறாய்ப்புக்கள் காரணமாக ஒப்பந்த நிறுவனத்திற்கு 14 ஆவது பட்டியலை செலுத்தாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் அந்நிறுவனத்தினால் தீர்ப்பனவுச் சபைக்கு இந்த 14 ஆவது பட்டியல் கொடுப்பனவிற்கு எடுத்துச் செல்லப்பட்டதுடன் அச்சபையின் தீர்மானத்தின் பிரகாரம் எமக்கு நிறுவனத்தினால் பணம் செலுத்தப்பட வேண்டுமென குறிப்பிட்ட காரணத்தினால் அந்நிறுவனம் தீர்ப்பனவு நடைமுறைக்கு உள்ளாக்கப்பட்டது. தீர்ப்பனவுச் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் | 14 ஆவது பட்டியலின் கொடுப்பனவு உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டியதாக காணப்படும் போது அதற்கமைய செயற்படாத காரணத்தினால் வட்டி செலுத்த நேர்ந்திருந்ததுடன் அது தொடர்பில் பரிசோதித்து பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர் களை இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தாமத வட்டி செலுத்தப்படாது கொடுப்பனவு அறிக்கைகளை நிறுத்தி வைக்கும் இயலுமை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள போது 2013 மார்ச் 19 ஆந் திகதி ஒப்பந்ததாரரும் உடன்படிக்கை இரத்துச் செய்யப்படுவதாக தெரிவித்துள்ள போது தாமத வட்டி கொடுப்பனவு கணக்காய்விற்கு பிரச்சினைக்குரியதாக காணப்பட்டது. | இக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. | |
| (இ) | 13 செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டு 1 முதல் 5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் ரூபா 9,949,016 கூட்டுத் தொகையான பிடிகாசு விடுவிக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளதுடன் கட்டுநிதி கிடைப்பதில் நிலவிய தாமதம் இதனை விடுவிக்காமக்கான காரணமாகும். | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட்டு பணம் விடுவிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | ஆராய்ச்சிக்கட்டுவ பிரதேச செயலகப் பிரிவில் பத்துலுஓயா, செங்கல் ஓயா மற்றும் சுருவில் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் நடாத்திச் செல்லப்படும் அனுமதியற்ற இறால் பண்ணைகள் 22 மற்றும் தற்போது செயலிழந்த நிலையில் காணப்படும் 04 பண்ணைகள் தொடர்பான தகவல்கள் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் அனுப்பப்பட்டிருந்த போதிலும் அந்த அனுமதியற்ற இறால் பண்ணைகள் கணக்காய்வுத் திகதியான 2022 சனவரி 14 ஆந் திகதி வரையிலும் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த இறால் | இதுவரையிலும் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | செயற்திறனாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பண்ணைகளிலிருந்து குத்தகை பணத்தை அறவிடுவதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | கிராம சக்தி முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களின் கீழ் புத்தளம் பிரதேச செயலகப் பிரிவிற்குரிய 12 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குரிய 12 சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த பணத்தில் ரூபா 9,901,991 ஆன தொகை காணப்பட்டதுடன் கணக்காய்வு சந்தர்ப்பத்தில் அனைத்து கிராம சக்தி சங்கங்களும் செயலிழந்த நிலையில் காணப்பட்டன. | கிராம சக்தி சங்கங்களை செயற்படுத்துவதற்கு அறிவுரை கிடைத்த பின்னர் செயற்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | மகாவெவ பிரதேச செயலகத்தின் நாத்தாண்டிய பிரதேச செயலகத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட சப்ரிகமக் அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் 2019 திசெம்பர் 06 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க அபிவிருத்தி சுற்றறிக்கையின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்திட்டம் திட்டவட்டமாக வரையறுக்கப்பட வேண்டியதுடன் அதற்கமைய வீதியின் தொடக்கம் மற்றும் முடிவு குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் நிறைவேற்றப்பட்ட 16 செயற்திட்டங்களில் அத்தகவல்களை காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுட்டிக்காட்டப்பட்டவாறு செயற்படுவதற்கு பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2021 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் பல்லம, இப்பன்பலவாய, மொலஎலிய, வாய்க்காலை அண்மித்த உயர்த்தும் நீர்ப்பாசன செயற்திட்டம் மற்றும் தம்மன, தும்சரணகம உயர்த்தும் நீர்ப்பாசனத் செயற்திட்டத்தின் நிர்மாணங்கள் ஆக்கபூர்வமான முறையில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடப்பட்டுள்ள போது இந்த இரு செயற்திட்டங்களுக்காக ரூபா 19,501,434 செலவினம் மேற்கொண்டமை கணக்காய்வில் சர்ச்சைக்குரியதாக காணப்பட்டது. மேலும் மதிப்பிடப்பட்ட தொகையை விட ரூபா 6,702,299 செலவிடப்பட்டிருந்தது. | இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் புத்தளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளடங்கலாக உத்தியோகத்தர்கள் களப் பரிசோதனையை மேற்கொண்டதுடன் அதற்கமைய இந்த நீர்ப்பாசனத் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2021.08.26 மற்றும் 2021.10.01 ஆந் திகதிய கடிதங்களின் மூலம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதன் போது இப்பன்வலவாய செயற்திட்டத்திற்காக நாளொன்றிற்கு 656 $m^3$ ஆன மற்றும் தம்மன செயற்திட்டத்திற்காக நாளொன்றிற்கு 60 $m^3$ ஆன அளவான நீர் பெற்றுக் கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே விலத்தவ வாய்க்கால் நிர்மாணிக்கப்பட்டுள்ள சுவர் காரணமாக தம்மன நீர்ப்பாசனச் செயற்திட்டத்தை செயற்படுத்தும் இடம் மற்றும் செங்கல்ஓயா சுவர் காரணமாக இப்பன்வெலவாய நீர்ப்பாசனச் செயற்திட்டத்தை செயற்படுத்தும் இடத்திற்கு ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் மாதங்களில் நீர்ப்பற்றாக்குறை இதுவரையிலும் ஏற்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்காக சாத்தியவள கற்கையொன்று மேற்கொள்ளப்பட்டு செயற்திட்டத்தை ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன் மதிப்பிடப்பட்ட தொகையினை விஞ்சி செலவினம் மேற்கொள்ளப்படலாகாது. |

**2.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் போது அதனை அண்மித்ததாக அமைந்துள்ள அதிசக்தி வாய்ந்த மின்சாரக் கம்பிகள் காணப்படின் கிடையான மற்றும் செங்குத்தான தொலைவு (Horizontal & Vertical Distance) மற்றும் அதன் மூலம் உடல் ரீதியாக ஏற்படக் கூடிய காந்த விசை (Magnetic Impact) தாக்கங்களை கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அது தொடர்பில் கவனம் செலுத்தாது முந்தலம பிரதேச செயலக கட்டிடம் நிர்மாணிக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. சுவரிலிருந்து சுமார் 2.5 அடி தொலைவில் அமைந்துள்ள மின்சாரக் கம்பிகளை அகற்றி தருமாறு கட்டிடத்தின் 03 ஆம் கட்டத்தின் நிர்மாணிக்கும் சந்தர்ப்பத்தில் மின்சார சபையிலிருந்து கோரப்பட்டுள்ளதுடன் அதற்காக 4,023,389 செலுத்த வேண்டியதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | மாவட்ட மின்சார பொறியியலாளரினால் களப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மின்சாரக் கம்பிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை என்பதை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எழுத்து மூலம் தீர்வொன்றினை வழங்குமாறு கூறப்பட்டுள்ளது. | உரிய பரிந்துரைகளை பெற்றுக் கொள்ள வேண்டியது சாத்தியவள கற்கை மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் என்பதுடன் வழங்கப்படும் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்களுக்கு இணங்க உள்ளதாக என்பதை கருத்தில் கொண்டு மேலதிக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.9 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாவட்ட செயலக அலுவலகத்தின் பொறியியல் திணைக்களத்தின் வழிகாட்டல் பிரதேச செயலக அபிவிருத்தி வேலை விடயத்திற்காக ஒரு கியூப் சரளைக் கற்களின் தளவிலை (ஏற்றல் மற்றும் அரசிறை உள்ளடங்கலாக) ரூபா 3,000 ஆன மாகாண | பரிசோதித்து மேலதிக கொடுப்பனவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | உண்மையான விலை வீதங்களை பயன்படுத்தி செயற்திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் மேலதிக கொடுப்பனவு களுக்கு பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர் |

| | | | |
|---|---|---|---|
| | விலைக்குழுவின் தளவிலை பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் புத்தளம் மாவட்ட செயலகத்தின் DSP/TFC/CS/01/மீ.க/(1)/ 2021 மற்றும் 2021 சனவரி 01 ஆந் திகதிய மாவட்ட விலைக்குழுவின் அறிக்கையின் பிரகாரம் ஒரு கியூப் சரளைக் கல் ஏற்றல் மற்றும் அரசிறை உள்ளடங்கலாக தளவிலை ரூபா 2,000 என குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய 2021 ஆம் ஆண்டில் பிரதேச செயலக அலுவலகங்கள் 13 இன் 89 செயற்திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்ட 7482.8 கனமீற்றர்கள் அளவான சரளைக்கற்கள் அல்லது 2641.3 கியூப் பயன்படுத்திய போது ஒரு கியூப் ரூபா 1,000 படி ரூபா 2,641,300 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | | களிடமிருந்து மீள அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் மூலம் நெல் கொள்வனவு செய்து அந்த நெல்லின் அளவுக்கு உரிய பணம் அரசினால் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2020/2021 பெரும்போகத்திற்காக 11 அரிசி ஆலை உரிமையாளர்கள் திசெம்பர் மாதத்தில் வழங்க வேண்டிய 402,927.7 கிலோகிராம் நாட்டரிசி அல்லது வழங்க வேண்டிய அரிசியின் அளவில் 61.12 சதவீதமும் 2021 சிறுபோகத்திற்காக அரசின் பணம் செலுத்தி கொள்வனவு செய்த நெல்லுக்காக அரிசி வழங்க வேண்டிய 19 அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு உரியதாக வழங்க வேண்டிய 1,006,687.5 கிலோகிராம் அரிசி | அரிசியினை பெற்றுக் கொள்வதற்கு அல்லது உரிய சட்டநடவடிக்கை எடுக்க உரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது. | செயற்திறனாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அல்லது வழங்க வேண்டிய மொத்த அரிசியின் அளவு 2022 மே 24 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்டிராததுடன் அது தொடர்பில் மாவட்ட செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | மாவட்ட செயலகத்தின் புதிய கட்டிடத்தின் நிர்மாண ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு தீர்ப்பனவுக்கு அனுப்பப்பட்டமையின் அடிப்படையில் தீர்ப்பனவு நடவடிக்கைகளுக்காக மதியுரை மற்றும் சமூக கட்டணமாக ரூபா 1,464,500 செலுத்த நேர்ந்திருந்தது. | 14 ஆவது பட்டியல் செலுத்தப்படாமையால் உடன்படிக்கையின் பிரகாரம் நடுவர் சபையின் தீர்ப்பனவிற்கு அனுப்பப்பட்டது. அங்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு ஒப்பந்த தரப்பினர் இணங்காத காரணத்தினால் தீர்ப்பனவிற்கு அனுப்பப்பட்டது. அதற்கமைய குறித்த கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. | 14 ஆம் பட்டியல் செலுத்தப்படா மையால் தீர்ப்பனவுக்குரிய செலவினங்கள் ஏற்பட்டுள்ள மையால் அப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகத்தினால் தமது விடயப் பரப்பிற்குரியதாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் நோக்கங்கள் தொடர்பிலான இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட தரவுகள் மற்றும் செயல் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் மற்றும் நிலையான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்து வதற்காக நிறுவனத்தின் பணிப்பொறுப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய அக்கறை கொண்ட தரப்பினர் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | மாவட்ட செயலகத்தினால் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கி இலக்கினை அடைந்து கொள்ளுதல் தொடர்பில் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளுக்கு இணங்கும் வகையில் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உள்நாட்டு திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான தேசிய கொள்கையொன்றை நடைமுறைப்படுத்தும் நிலைமையில் பிளாஸ்டிக் பாவனையை குறைப்பதற்காக அரச நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும் என அவதானிக்கப்பட்ட போதிலும் பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தன்னார்வ நிறுவனங்களுக்கு வழங்குவதற்காக மாவட்ட செயலகத்திற்குரிய 16 பிரதேச செயலகங்களிலும் 9218 பிளாஸ்டிக் கதிரைகளை கொள்வனவு செய்வதற்கு ரூபா 10,621,677 ஆன தொகையும் 10 பிளாஸ்டிக் மேசைகளை கொள்வனவு செய்வதற்கு ரூபா 56,400 ஆன தொகையுமாக ரூபா 10,973,577 கூட்டுத்தொகை பெறுமதியான பிளாஸ்டிக் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் புத்தளம் மாவட்டம் முழுவதிலும் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்த கொள்வனவுகளின் காரணமாக அந்த பிளாஸ்டிக் இருப்பு எதிர்வரும் வருடங்களில் சூழலுக்கு சேரும் அபாயம் உள்ளமை கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டது. | பிளாஸ்டிக் பயன்பாட்டினை குறைக்கும் தேவைப்பாடு தொடர்பில் மாவட்ட அரசியல் சார் அதிகாரிகளுக்கு அறிவூட்டப்பட்டுள்ளதுடன் அதிக எண்ணிக்கையான நபர்களுக்கு நலனை பெற்றுக் கொள்ளும் நோக்கில் மற்றும் சமூகத்தின் தேவைப்பாட்டினை கருத்தில் கொண்டு பிளாஸ்டிக் கதிரைகள் வழங்கப்படுகின்றது. பிளாஸ்டிக் தண்ணிர் தாங்கிகளுக்காக மாற்று தாங்கிகள் இல்லை என்பதை சுட்டிக் காட்டுகின்றேன். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளுக்கு இணங்கும் வகையில் செயற்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| புத்தளம் மாவட்ட செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் 12 பதவிகளுக்குரிய 26 வெற்றிடங்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் 18 பதவிகளுக்குரிய 326 வெற்றிடங்கள் நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றேன். | நிலவும் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |